2. தகவல் கோரல்

ராம ராஜ்ய ரத யாத்திரையை தமிழகத்தில் அனுமதித்தது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிற்குள் 'விஷ்வ இந்து பரிஷத்'தினுடைய "ராம ராஜ்ய யாத்திரை"யை அனுமதித்ததற்கு நான் கடும் கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மத நல்லிணக்கத்தினுடைய பிறப்பிடமாக விளங்கிக் கொண்டிருக்கக்கூடிய இந்த மண்ணில் தந்தை பெரியார் அவர்கள் பிறந்தார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். ** ரத யாத்திரை இராமர் கோயில் கட்டுவதற்கென்று அவர்கள் கூறியிருக்கிறார்கள். அந்த வழக்கு இப்போது நீதிமன்றத்திலே, அதுவும் குறிப்பாக உச்ச நீதிமன்றத்திலே தலைமை நீதிபதி பெஞ்ச்–லேயே நிலுவையில் இருந்து கொண்டிருக்கிறது. ** ஆகவே, இதுகுறித்து உரிய விளக்கத்தை (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதி காக்கவும்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *இந்த அரசு இந்த அவையிலே எடுத்து வைக்க வேண்டுமென்று நான் வலியுறுத்தி, வற்புறுத்தி கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) திரு. ஜே.ஜி. பிரின்ஸ், அனுமதியில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசட்டும். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) அவர் zero hour–ல் raise செய்திருக்கிறார். நீங்களும் raise செய்திருந்தால், நான் அதை பதிவு செய்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அழைத்து விட்டேன், நீங்கள் உட்காருங்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஸ்ரீ ராமதாச மிஷன் சர்வதேச சங்கத்தின்" சார்பில் "ராம ராஜ்ய ரத யாத்திரை" ஒன்று கடந்த 13–2–2018*

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

அன்று அயோத்தியாவில் துவங்கியது. இந்த ரத யாத்திரை, அச்சங்கத்தின் தேசியச் செயலாளர் திரு. சக்தி சாந்த ஆனந்த மகரிஷி தலைமையில், உத்தரப் பிரதேச மாநிலம் அயோத்தியில் புறப்பட்டு, மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா, கர்நாடகா, கேரளா ஆகிய மாநிலங்களைக் கடந்து தமிழ்நாட்டிற்கு இன்று வந்துள்ளது. 20–3–2018 அன்று கேரள மாநிலம் புனலூரிலிருந்து திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை வழியாக நமது மாநிலத்திற்குள் நுழைந்து, ராஜபாளையம், மதுரையை வந்தடைந்து, மறுநாள் 21–3–2018 அன்று ராமேஸ்வரத்தை அடைகிறது.

பின்னர், ராமேஸ்வரத்திலிருந்து 22–3–2018 அன்று தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டங்கள் வழியாக கன்னியாகுமரியை அடைந்து, மறுநாள் 23–3–2018 அன்று திருவனந்தபுரத்திற்கு செல்கிறது.

ராம ராஜ்ய ரத யாத்திரை நமது மாநிலத்தில் வருவதற்கு சில முஸ்லிம் அமைப்புகளும், தமிழ் ஆதரவு அமைப்புகளும் மற்றும் சில அரசியல் கட்சிகளும் தங்களது எதிர்ப்பைத் தெரிவித்து, அந்த ரத யாத்திரையை தமிழ்நாட்டில் அனுமதிக்கக் கூடாது என்று கோரி காவல் துறையினரிடம் மனுக்கள் அளித்தனர்.

முற்பகல் 11–20

ஸ்ரீ ராமதாச மிஷன் சர்வதேச சங்கம் என்ற அறக்கட்டளையின் சார்பாக இந்த ராம ராஜ்ய ரத யாத்திரை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட ஐந்து மாநிலங்களிலும் இந்த ரத யாத்திரைக்கு எந்தவிதமான எதிர்ப்பும் எழவில்லை. அம்மாநிலங்களில் எந்தவித பிரச்சினையும் இல்லாமல் இந்த யாத்திரை இதுவரை கடந்து வந்துள்ளது. இந்த ரத யாத்திரை தமிழ்நாட்டிற்குள் வருவதை முன்னிட்டு சட்டம்–ஒழுங்கைப் பராமரிக்க, யாத்திரை செல்லும் மாவட்டங்களில் காவல் துறையினர் தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்துள்ளனர். இதனைத் தொடர்ந்து சட்டம்–ஒழுங்கைப் பராமரிக்கவும், அசம்பாவிதங்கள் ஏதும் ஏற்படாமல் தடுக்கவும் திருநெல்வேலி, காஞ்சிபுரம், நாகப்பட்டினம், மதுரை, விருதுநகர், கன்னியாகுமரி மாவட்டங்களில் 121 பேர் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குச் சொல்கிறேன். ஐந்து மாநிலங்களில் ரத யாத்திரை நடந்திருக்கிறது.

(மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) இதில் அரசியல் சாயம் பூசுவது சரியல்ல. (குறுக்கீடுகள்) ** (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இருங்கள், இருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லட்டும். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசும்போது. . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் பேசட்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லட்டும். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: இதேமாதிரி அவர்கள் கட்சியின் உறுப்பினர்கள் பேசும்போது, எங்களுடைய உறுப்பினர்கள் இருக்க மாட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது சரியாக வராது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசும்போது நீங்கள் அமைதியாக இருக்க வேண்டும். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: ஏனென்றால் அவர்கள் பேசும்போது, நாங்கள் அமைதியாக இருந்தோம். கடுஞ்சொற்களையெல்லாம் உபயோகப்படுத்தினார். அவற்றையெல்லாம் நாங்கள் பொறுத்துக்கொண்டுதான் இருக்கிறோம். இங்கே அரசியல் சாயம் பூசுவது சரியல்ல. தமிழகத்தை பொறுத்தவரைக்கும் எல்லா மதத்திற்கும் சம உரிமை உண்டு. அதை யாரும் தடை செய்ய முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) இது ஜனநாயக நாடு. இந்த மதம், அந்த மதம் என்று வேறுபடுத்திக் காட்ட முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) ஜனநாயக நாட்டில் அனைவருக்கும் பாதுகாப்பு கொடுப்பது அரசின் கடமை. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தக் கடமையை கடைப்பிடித்துதான் இங்கே பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. நான் ஏற்கெனவே கூறியதுபோல, இந்த ரதம் பல மாநிலங்கள்; மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா, கர்நாடகா, கேரளா எல்லாவற்றையும் கடந்துதான் வந்திருக்கிறது. மீண்டும் இங்கே முடித்துவிட்டு, கேரளா வழியாகத்தான் செல்லவிருக்கிறது. இதிலே எவ்வித பிரச்சினையும் எழுந்ததாக எனக்குத் தெரியவில்லை. எனினும், சில அரசியல் கட்சித் தலைவர்கள் இதில் அரசியல்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2018 மார்ச் 20] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

ஆதாயம் தேட முற்படுகின்றனர். அதுதான் இங்கே தெளிவாகத் தெரிகிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

மேலும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், சில கடுஞ்சொற்களை இங்கே பேசியுள்ளார்கள். ** அந்த வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து தாங்கள் நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள், உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* Argument தானே? *(குறுக்கீடுகள்)* விவாதம் தானே? *(குறுக்கீடுகள்)* இல்லையில்லை, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், கொஞ்சம் உட்காருங்கள். உட்காருங்கள். உட்காருங்கள் நான் சொல்கிறேன். *(குறுக்கீடுகள்)*

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்று 'தடை செய், தடை செய், யாத்திரையை தடை செய்' என்று கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் எழுந்து நின்று கொண்டிருந்தனர்.)

உட்காருங்கள். இதெல்லாம் முறையல்ல. உட்காருங்கள். முதலில் எல்லோரும் சொல்வதைக் கேளுங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் ஒரு பிரச்சினையை எழுப்பினார். *(குறுக்கீடுகள்)* Zero hour–ல் எதிர்க்கட்சித் தலைவர் ஒரு பிரச்சினையை எழுப்பினார். *(குறுக்கீடுகள்)* நீங்கள் ஒரு பிரச்சினையை எழுப்பினீர்கள், அதற்குரிய பதிலை அரசாங்கத்தின் சார்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்று கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)

உங்களுக்கு பதில் திருப்தி அளிக்கவில்லையென்றால், அதற்கு நான் என்ன செய்ய முடியும்? *(குறுக்கீடுகள்)* நீங்கள் எதிர்பார்க்கிற பதில்—உங்களுக்கு திருப்தி அளிக்கவில்லை என்றால் ஒன்றும் செய்ய முடியாது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவான பதிலை, அதற்கு உரிய பதிலை வழங்கிவிட்டார்கள்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்று தொடர்ந்து கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

[பேரவைத் தலைவர்] [2018 மார்ச் 20

நீங்கள் மேற்கொண்டு இப்படிப் பிரச்சினை செய்வது முறையல்ல. (குறுக்கீடுகள்) முறையல்ல. (குறுக்கீடுகள்) அது சரியல்ல. நீங்கள் எப்படி பிரச்சினையை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தீர்களோ, அதற்கு நான் அனுமதி அளித்தேன். அந்தப் பிரச்சினையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவான பதிலைச் சொல்லிவிட்டார். அதற்குப் பிறகும், உங்களுக்கு பதிலில் திருப்தியில்லை என்றால் நான் என்ன செய்ய முடியும்?

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்று தொடர்ந்து கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)

இந்த அவையை நடத்துவதில் (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பதிலை நீங்கள் ஏற்றுக்கொள்வதும், ஏற்றுக்கொள்ளாததும் உங்களுடைய விருப்பம். ஆனால், எனக்கு அவையை நடத்துவதில் நீங்கள் இதுமாதிரி குந்தகம் விளைவிப்பது முறையில்லை.

(மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி இருக்கையிலிருந்து எழுந்து வந்து, பேரவைத் தலைவர் இருக்கைக்கு முன்பு அமர்ந்து கோஷமிட்டுக் கொண்டிருந்தார்.)

எழுந்திருங்கள், எழுந்திருங்கள், உங்கள் இருக்கைக்குச் செல்லுங்கள். உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள்.

(மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி தனது இருக்கைக்குச் சென்று நின்றுகொண்டு கோஷமிட்டுக் கொண்டிருந்தார்.)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்று தொடர்ந்து கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)

முற்பகல் 11–25

உட்காருங்கள். ஏதாவது நீங்கள் சொல்ல வேண்டுமென்றால், (குறுக்கீடுகள்) உட்காருங்கள், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் ஏதாவது இதற்கு நீங்கள் பேச வேண்டும் என்று சொன்னால் நான் அனுமதி கொடுக்கிறேன். (குறுக்கீடுகள்) ஆனால், அதற்காக அவையை நடத்த விடாமல் செய்வது என்ன நியாயம்? (குறுக்கீடுகள்) இல்லை, அவையை நீங்கள் நடத்த விடாமல் செய்வது என்ன நியாயம்?

2018 மார்ச் 20] [பேரவைத் தலைவர்]

(உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி அவையிலிருந்து வெளியேறினார்.)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் 'தடை செய், தடை செய், ரத யாத்திரையை தடை செய்' என கோஷமிட்டனர்.)

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். உங்களுக்குப் பதில் திருப்தி தரவில்லையென்றால், அதற்கு நான் ஒன்றும் செய்ய முடியாது. அரசு பதில் சொல்லிவிட்டது. (கூச்சல்— குழப்பம்) அரசு அதற்குரிய பதிலைச் சொல்லிவிட்டது. பதில் உங்களுக்கு திருப்தியளிக்கவில்லையென்றால் நான் ஒன்றும் செய்ய முடியாது. நீங்கள் அதை முடிவு செய்துகொள்ளுங்கள். அவையை நடத்த ஒத்துழைப்புக் கொடுங்கள். அவையை நடத்துவதற்கு எனக்கு உதவி செய்யுங்கள். இது முறையல்ல.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் 'தடை செய், தடை செய், விஷ்வ ஹிந்து பரிஷத்தின் ரத யாத்திரையைத் தடை செய், கண்டிக்கிறோம், கண்டிக்கிறோம்' என கோஷமிட்டனர்.)

நீங்கள் பிரச்சினையைப் பேசுவதற்கு அனுமதி கேட்டீர்கள். நீங்கள் முழுவதுமாக பேசுவதற்கு நான் அனுமதி கொடுத்தேன். அதேபோல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்குரிய விளக்கத்தைச் சொல்லிவிட்டார்கள். அந்த விளக்கத்திற்குப் பின்னாலே அதை ஏற்றுக்கொள்வது, ஏற்றுக்கொள்ளாதது உங்களுடைய விருப்பம். ஆனால், இப்படி அவையை நடத்த விடாமல் செய்வது முறையல்ல. இது முறையல்ல. நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். இல்லை, நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். இது சரியல்ல. (கூச்சல்— குழப்பம்) இது சரியல்ல, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களுக்கும் வேண்டுகோளாக வைக்கிறேன். உங்களுடைய கோரிக்கைக்குரிய விளக்கத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவாக தன்னுடைய பதிலிலே சொல்லிவிட்டார். உங்களுக்கு திருப்தி தரவில்லை என்றால், அதற்கு உங்களுடைய நடவடிக்கை அவையை முடக்குவது அல்ல. அவையை நடத்தவிடாமல் செய்வது முறையல்ல. இப்படிச் செய்தால் நான் மற்ற நடவடிக்கைகளுக்குப் போக வேண்டியிருக்கும். (குறுக்கீடுகள்) பதில் திருப்தி இல்லையென்றால், முடிவை நீங்கள் எடுத்துக்கொள்ளுங்கள். உங்களுடைய எதிர்ப்பைத் தெரிவித்துவிட்டு உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இந்த பதில் திருப்தி இல்லையென்று

இவ்வளவு நேரம் உங்களுடைய எதிர்ப்பைத் தெரிவித்துவிட்டீர்கள். அவ்வளவுதான், அவையை நடத்தவிடுங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, எல்லோரும் நின்றுகொண்டிருந்தால் எப்படி? அவையை நடத்தவிடுங்கள். இல்லையென்றால், நான் வேறு நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். அது சரியில்லை. வேண்டாம், அது வேண்டாம். உட்காருங்கள், நீங்கள். (கூச்சல்–குழப்பம்) நான் என்னுடைய இறுதி வேண்டுகோளாகவும், எச்சரிக்கையாகவும் தெரிவித்துக்கொள்கிறேன். உங்களுடைய பிரச்சினையை நீங்கள் எழுப்புவதற்குத்தான் நான் அனுமதி கொடுக்க முடியும். அதற்குப் பின்னாலும் உரிய பதிலை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உங்களுக்குத் தெரிவித்துவிட்டார்கள். பதில் உங்களுக்குத் திருப்தி அளிக்கவில்லையென்றால், முடிவு நீங்கள் எடுத்துக்கொள்ளுங்கள். உங்களுடைய எதிர்ப்பைத் தெரிவித்துவிட்டீர்கள். அவையை நடத்துவதற்கு எனக்கு ஒத்துழைப்புக் கொடுங்கள்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தொடர்ந்து கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)

அவையை நடத்துவதற்கு எனக்கு நீங்கள் ஒத்துழைப்புக் கொடுக்கவில்லையென்றால் நான் வேறு நடவடிக்கைக்குச் செல்ல வேண்டியிருக்கும். நான் மீண்டும், மீண்டும் எச்சரிக்கிறேன். இது முறையில்லை. அவையை நடத்த நீங்கள் அமைதியாக இருந்து எனக்கு ஒத்துழைப்புக் கொடுங்கள். அவையை நடத்த ஒத்துழைப்புக் கொடுங்கள். (குறுக்கீடுகள்) நான் பதில் கொடுத்துவிட்டேன். இல்லை, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்ட கேள்விக்கு நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமிருந்து பதிலைப் பெற்றுக் கொடுத்துவிட்டேன். திருப்தியளிக்கவில்லையென்றால், நீங்கள்தான் முடிவு செய்ய வேண்டும். அவையை நடத்த விடாமல் செய்யக் கூடாது. இதற்குமேல் அவையை நடத்த வேண்டியது என்னுடைய பொறுப்பு. (குறுக்கீடு) இல்லை. வேறு வழியில்லை. நிகழ்ச்சி நிரலைக் கொடுங்கள். நிறைய அலுவல்கள் இருக்கின்றன. அடுத்த அலுவலுக்குப் போக வேண்டியிருக்கிறது.

(உறுப்பினர் திரு. உ. தனியரசு அவையிலிருந்து வெளியேறினார்.)

முற்பகல் 11–30

ஏற்கெனவே உங்களிடத்திலே நான் பேசி, தகவல் கோரல் என்ற அடிப்படையிலே இரண்டு, மூன்று தகவல்களைக் கோர உங்களுக்கு அனுமதி அளிப்பதாக வாக்குறுதி கொடுத்தேன்.

2018 மார்ச் 20] [பேரவைத் தலைவர்]

(குறுக்கீடுகள்) அந்த வாக்குறுதிகளை உங்களுக்கு நான் நிறைவேற்றித் தருவதாக இருக்கிறேன். *(குறுக்கீடுகள்)* ஆனால், நீங்கள் அதற்கெல்லாம் எனக்கு ஒத்துழைக்காமல், *(குறுக்கீடுகள்)* இல்லை, அதற்கு நான் என்ன செய்ய முடியும்? *(குறுக்கீடுகள்)* நீங்கள் உங்களுடைய கோரிக்கையை *(குறுக்கீடுகள்)* எதிர்க்கட்சித் தலைவர், நான் உங்களுடைய கோரிக்கையை ஏற்று அனுமதி கொடுக்காமல் இருந்திருந்தால் அது என்னுடைய தவறு. *(குறுக்கீடுகள்)* நான் உங்களுக்கு முழு சுதந்திரம் கொடுத்து முழுவதும் பேச விட்டேன். *(குறுக்கீடுகள்)* நீங்கள் பேசி முடித்துவிட்டீர்கள். *(குறுக்கீடுகள்)* ஆளுங்கட்சியில் பதில் சொல்லிவிட்டார்கள். *(குறுக்கீடுகள்)* ஆளுங்கட்சியில் பதில் சொல்லிவிட்டார்கள். அதில் திருப்தி இல்லையென்றால் உங்களுடைய எதிர்ப்பைத் தெரிவிக்கலாம். *(குறுக்கீடுகள்)* எதிர்ப்பைத் தெரிவித்துவிட்டீர்கள். அதற்கு இன்னும் எத்தனையோ வழிகள் இருக்கின்றன. அவற்றைக் கடைப்பிடிக்கலாம். *(குறுக்கீடுகள்)* அவற்றை விட்டுவிட்டு, நீங்கள் அவையை நடத்த விடாமல் செய்வது என்ன முறை? இது சரியல்ல. *(குறுக்கீடுகள்)* இது சரியல்ல. *(குறுக்கீடுகள்)* நீங்கள் அமைதியாக இருங்கள். *(குறுக்கீடுகள்)* அமைதி. *(குறுக்கீடுகள்)* நீங்கள் இன்று சபையை நடத்தவிடாமல் செய்ய வேண்டும் என்று தீர்மானம் செய்திருந்தால் *(குறுக்கீடுகள்)* நான் எப்படி பதில் சொல்ல முடியும்? *(குறுக்கீடுகள்)* அதற்கான பதிலை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரசாங்கத்தின் சார்பாகச் சொல்லிவிட்டார்கள். *(குறுக்கீடுகள்)* பதில் சொல்லாமல் இருந்தால் நான் மீண்டும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அதற்குண்டான விளக்கத்தைச் சொல்லுங்கள் என்று சொல்லலாம். அவர் தெளிவான விளக்கத்தைச் சொல்லிவிட்டார். அதற்குமேல் அரசாங்கத்தை வற்புறுத்த முடியாது. *(குறுக்கீடுகள்)* அதற்குமேல் அரசாங்கத்தை என்னால் வற்புறுத்த முடியாது. *(குறுக்கீடுகள்)* நீங்கள் உங்களுடைய எதிர்ப்பை இவ்வளவு நேரம் தெரிவித்துவிட்டீர்கள். *(குறுக்கீடுகள்)* இனிமேல் சபையை நடத்தலாம். வாருங்கள். *(குறுக்கீடுகள்)* இல்லை, இல்லை. சபையை நடத்த எனக்கு ஒத்துழைப்புக் கொடுங்கள். *(குறுக்கீடுகள்)*

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்று தொடர்ந்து கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)

நீங்கள் எவ்வளவுதான் உங்களுடைய கோஷங்களை எழுப்பினாலும், அவையை நடத்த வேண்டிய கடமை எனக்கு இருக்கிறது. *(குறுக்கீடுகள்)* ஆகவே, நான் அடுத்த அலுவலுக்குச் செல்கிறேன். *(குறுக்கீடுகள்)*